Seal Not Available
SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:04:14 +0530
D.M.-Cum-J.M., Tvnlr

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.**

**முன்னிலை : திரு.ரெ. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவெண்ணெய்நல்லூர்.

2026 ஆம் வருடம் ஜுலை திங்கள் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 229/2024**

(CC.No.220/2018 on the file of the Judicial Magistrate, Tirukoilur)

(CNR NO: TNVP34-000278-2024)

**அரகண்டநல்லூர் காவல் நிலைய குற்ற எண் : 250/2017**

குற்றமுறையிடுபவர் அரசுக்காக:- காவல் உதவி ஆய்வாளர்,
அரகண்டநல்லூர் காவல் நிலையம்,

எதிரியின் பெயர் பிரகாஷ், த/பெ. தர்மலிங்கம்,
முருகன் கோயில் தெரு,
ஆற்காடு கிராமம்,கண்டாச்சிபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | |
| வழக்கின் சுருக்கம் | | | |
| எதிரியின் காவல் அடைப்பு நாட்கள் | எதிரியின் பெயர் | காவல் அடைப்பு நாள் | விடுவிப்பு நாள் |
| | பிரகாஷ் | 02.06.17 | நீதித்துறை நடுவர், திருக்கோவிலூர் அவர்களின் சி.எம்.பி. எண்.3180/2017, 07.06.2017 தேதியிட்ட உத்தரவின் |

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:05:41 +0530
D.M.-Cum.,J.M., Tvnlr.,

| | | | |
|---|---|---|---|
| | | | பேரில் எதிரி பிணையில் சென்றுள்ளார். |
| புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | புகார் தாக்கல் செய்த நாள் | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | |
| | 02.06.2017 | 11.10.2018 | |
| மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள் | -- | | |
| கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள் | 24.10.2025 | | |
| அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனுவை தவிர | குற்றவியல் பல்வகை மனு எண் . | மனு நாள் | முடிவு |
| | - | - | - |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர் | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
| | அ.சா.1 சுரேஷ் | 24.10.2025 | 24.10.2025 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அ.சா.2 | பிரபாகரன் | 24.10.2025 | 24.10.2025 |
| | அ.சா.3 | வெள்ளிகண்ணு | 24.10.2025 | 24.10.2025 |
| | அ.சா.4 | அரிகுமார் | 29.07.2026 | 29.07.2026 |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | 31.07.2026 | | | |
| எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | - | | | |
| மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | அமர்வு நீதிமன்ற கு.ப. ம.எண்கள் | உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் | முடிவு | |
| | - | - | - | |
| குற்றச்சாட்டுக்கள் | கடந்த 02.06.2017 ம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரி ஆற்காடு காலனியில் உள்ள முருகன் கோவில் அருகில் இரு சக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதால் 4 ம் சாட்சி ஏன் இப்படி ஜனங்க நடமாடுற இடத்துல இவ்வளவு வேகமாக போகிறாய் என்று கேட்டதால் வாய் தகராறு ஏற்பட்டபோது சாட்சி 1 சுரேஷ் மறித்துவிட்டபோது எதிரி சாட்சி 1 ஐ தேவிடியா பையா நீ யாருடா வந்து மறிச்சி விடுவதற்கு என்று அசிங்கமாக பொதுமக்கள் அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் பேசி, அருகிலிருந்து கல்லை எடுத்து சாட்சி 1ன் நெற்றியில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, சாட்சி 1 ஐப் பார்த்து எதிரி ஆகிய நீர் " நீ என் கண்ணில் பட்டாலோ உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததன் காரணமாக இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 506(1)ன் கீழ் | | | |

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:05:28 +0530

**D.M.-Cum.,J.M., Tvnlr.,**

| | |
|---|---|
| | குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறப்பட்டது. |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை, பொய் வழக்கு. |
| நீதிபதியின் முடிவு | எதிரி மீதான இ.த.ச.பிரிவு 294(பி), 324, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து குற்றவாளி இல்லை என முடிவு. |
| நீதிபதியின் தீர்ப்பு | **முடிவாக,** 1). எதிரி மீதான இ.த.ச.பிரிவு 294(பி), 324, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.<br>2). இவ்வழக்கில் எதிரிக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br>3). இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அது பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 31.07.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. I. பரூக் ஷா, B.A., L.L.M, அரசு உதவி வழக்கறிஞர் நிலை - 1, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.A.ஜயப்பன், B..A., L.L.B., (Hons), அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**வழக்கின் சுருக்கம்** :-

1. கடந்த 02.06.2017 ம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரி ஆற்காடு காலனியில் உள்ள முருகன் கோவில் அருகில் இரு சக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதால் 4 ம் சாட்சி ஏன் இப்படி ஜனங்க நடமாடுற இடத்துல இவ்வளவு வேகமாக போகிறாய் என்று கேட்டதால் வாய் தகராறு ஏற்பட்டபோது சாட்சி 1 சுரேஷ் மறித்துவிட்டபோது எதிரி சாட்சி 1 ஐ

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:05:21 +0530

தேவிடியா பையா நீ யாருடா வந்து மறிச்சி விடுவதற்கு என்று அசிங்கமாக பொதுமக்கள் அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் பேசி, அருகிலிருந்து கல்லை எடுத்து சாட்சி 1ன் நெற்றியில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, சாட்சி 1ஐப் பார்த்து எதிரி ஆகிய நீர் " நீ என் கண்ணில் பட்டாலோ உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததன் காரணமாக இவ்வழக்கின் எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 506(1)ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளார் என்று அரகண்டநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்த வழக்கானது நீதித்துறை நடுவர், திருக்கோவிலூர் அவர்களால் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.220/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு மாவட்ட முதன்மை நீதித்துறை நடுவர், விழுப்புரம் அவர்களின் A.No.83/2023. Dt:14.09.2023 ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.229/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

3. இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204-ன் படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.207-ன் படி வழக்காவணங்கள் இலவசமாக எதிரிக்கு வழங்கப்பட்டது. பின்னர் இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், எதிரியிடம்,

> கடந்த 02.06.2017 ம் தேதி காலை 07.00 மணியளவில் எதிரி ஆற்காடு காலனியில் உள்ள முருகன் கோவில் அருகில் இரு சக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றதால் 4ம் சாட்சி ஏன் இப்படி ஜனங்க நடமாடுற இடத்துல இவ்வளவு வேகமாக போகிறாய் என்று கேட்டதால் வாய் தகராறு ஏற்பட்டபோது சாட்சி 1 சுரேஷ் மறித்துவிட்டபோது எதிரி சாட்சி 1ஐ தேவிடியா பையா நீ யாருடா வந்து மறிச்சி விடுவதற்கு என்று அசிங்கமாக பொதுமக்கள் அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் பேசி, அருகிலிருந்து கல்லை எடுத்து சாட்சி 1ன் நெற்றியில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, சாட்சி 1ஐப் பார்த்து எதிரி ஆகிய நீர் " நீ என் கண்ணில் பட்டாலோ உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்ததன் காரணமாக இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி),

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:05:14 +0530

324 மற்றும் 506(1)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று குற்றத்தை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1, முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. பட்டியல் சாட்சிகள் 2, 4, 5, 8 வரையிலானவர்கள் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் விளக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் கூடுதலாக ஒரு சாட்சி சேர்த்து விசாரணை செய்யப்பட்டுள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

**அரசுத் தரப்பு சாட்சியத்திலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம் :-**

6. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், கண்ணுற்ற சாட்சி அ.சா.3 ஆகவும், அ.சா.2 பார்வை மகஜர் சாட்சியாகவும், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

7. புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், "புகார்தாரர் எனது கணவர், அவர் தற்போது இறந்துவிட்டார். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் எங்கள் ஊர் முருகன் கோயில் அருகே கூட்டமாக இருந்தது. அதை வேடிக்கை பார்க்க சென்ற என்னை அங்கிருந்தவர்கள் யாரோ அசிங்கமாக திட்டி கல்லால் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள். சம்பவம் நடைபெறும்போது கூட்டமாக இருந்ததால் யார் என்னை அசிங்கமாக பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது." என்று சொல்லியுள்ளார்.

8. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4, தன்னுடைய சாட்சியத்தில், "கடந்த 02.06.2017ம் உதவி ஆய்வாளர் சிவகுமார் பணியளலிருந்தபோது 13.00 மணிக்கு திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சிகிச்சையிலிருந்த பெருமாள் மகன் சுரேஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம்

(அ.சா.ஆ-2) பெற்று நிலைய குற்ற எண்.250/2017, ச/பி. 294(பி), 324, 506(1) இ.த.ச. படி முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ-3) பதிவு செய்துள்ளார். மேற்படி வழக்கை அவரே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ-4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ-5) தயார் செய்துள்ளார். பின்பு பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகள் விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடிச் சென்றதில் அன்றே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சுரேஷ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அவரது வாக்குமூலம் மற்றும் விபத்து பதிவேடு (அ.சா.ஆ-6) பெற்றுள்ளார். இத்துடன் அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என்று சொல்லியுள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**அரசு தரப்பு வாதம்:-**

10. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலமாகவும், அ.சா.ஆ-1 முதல் அ.சா.ஆ-6 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்கும்படி வாதிட்டார்.

**எதிரி தரப்பு வாதம்:-**

11. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 பிறழ்சாட்சிகள் என்பதாலும், அ.சா.4 புலன் விசாரணை அதிகாரி மட்டுமே என்றும், அவர் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே

சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 506(1)ன் கீழான உட்கூறுகள் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

12. எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(பி), 324, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டு உள்ளதா? என்பதேயாகும்.

**தீர்வு :-**

**பிரச்சனைக்கான தீர்வு:**

13. புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், "சம்பவம் நடைபெறும்போது கூட்டமாக இருந்ததால் யார் என்னை அசிங்கமாக பேசி அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது." என்று கூறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்தபோது அரசு தரப்பு கேள்விகளுக்கு சரியல்ல என்று மறுத்துள்ளதால் இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் விதமாக இல்லை என்பது தெளிவாகிறது.

14. கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், "சம்பவம் நடைபெறும்போது கூட்டமாக இருந்ததால் யார் அ.சா.1ஐ அசிங்கமாக பேசி அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது." என்று கூறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்தபோது அரசு தரப்பு கேள்விகளுக்கு சரியல்ல என்று மறுத்துள்ளதால் இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் விதமாக இல்லை என்பது தெளிவாகிறது.

15. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், "தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. " என்று கூறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்தபோது அரசு தரப்பு கேள்விகளுக்கு சரியல்ல என்று மறுத்துள்ளதால் இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் விதமாக இல்லை என்பது தெளிவாகிறது.

16. புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4, குறுக்கு விசாரணையில், நான் இந்த வழக்கில் விசாரணை அதிகாரி அல்ல. கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.1 கொடுத்தப் பொய்யான புகாரினைப் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல என்று சொல்லியுள்ளார்.

*As per decision cited in* ***<u>CDJ 2012 SC199- Govindaraju @ Govinda Versus State by Sriramapuram P.S. & Another – Hon'ble Supreme Court</u>*** *held in Para 47 that "the statement of the sole witness, the Police Officer, PW1 is not reliable and worthy of credence". மேற்கண்ட முன்தீர்ப்பில் காவல் அலுவலரான அ.சா.1-ன் தனிப்பட்ட சாட்சியம் நம்பகமானது அல்ல மற்றும் நம்பகத்தன்மைக்கு தகுதியானது என்று சொல்லியுள்ளது இந்த வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.*

17. மேற்கண்ட பரிசீலனை மற்றும் முன்தீர்ப்பிலிருந்து, அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் தங்களது சாட்சியத்தில், எதிரி அசிங்கமாக திட்டி, அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லாததாலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் பிறழ் சாட்சிகளாகியுள்ளதாலும், அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் கருத்தில் கொள்வது நம்பகமானது அல்ல மற்றும் நம்பக தன்மைக்கு தகுதியானது என்பதாலும் எதிரி மீதான இ.த.ச.பிரிவு 294(பி), 324, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18. எனவே, முடிவாக,**

1). எதிரி மீதான இ.த.ச.பிரிவு 294(பி), 324, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

2). இவ்வழக்கில் எதிரிக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:04:48 +0530

**D.M.-Cum.,J.M., Tvnlr.,**

3). இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அது பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 31ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.07.31 18:04:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவெண்ணெய்நல்லூர்.

**அரசுதரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சிகளின் எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | விவரங்கள் |
|---|---|---|
| அ.சா.1 | சுரேஷ் | புகார்தாரர் |
| அ.சா.2 | பிரபாகரன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | வெள்ளிகண்ணு | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | அரிகுமார் | புலன் விசாரணை அதிகாரி |

**அர சுதரப்பு சான்றாவணங்கள் :-**

| அரசு தரப்பு சான்றாவணங்-களின் எண் | அரசு தரப்பு சான்றாவணம் | யாரால் குறியீடு செய்யப்பட்டது. |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ. 6 | அ.சா.1ன் விபத்து பதிவேடு | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்**:- இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள்**:- இல்லை.

**குறிப்பு:-**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.

2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

3. தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், விழுப்புரம்- அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

SENTHILKUMAR Digitally signed by SENTHILKUMAR Date: 2026.07.31 18:04:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவெண்ணெய்நல்லூர்.